**தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் - 2021**

-----------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

---------------------------------

**1.1 அபிப்பராயம்**

------------------------

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

----------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘சிறப்பாகக் திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

---

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **<u>2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டம்</u>** | | | |
| (i) | 3(அ) உப பிரிவு | ஊழியர்களின் நலனை உறுதிசெய்யும் வகையில், அவர்களை வளர்ச்சிப் பணிகளில் தீவிரமாகப் பங்குபெறச் செய்ய எடுக்கப்பட்ட முறையான நடவடிக்கைகள் அவதானிக்கப்படவில்லை. | ஊழியர்களை அபிவிருத்தி நடைமுறையின் செயற்பாட்டு பங்காளர்களாக்குவதற்கு தொழிலாளர் சட்டம், தொழில்துறை உறவுகள், மனித வள மேம்பாடு, பெறுகைகள், தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப்பிரமாணம் போன்றவற்றைப் புரிந்துகொள்வதன் மூலம் அவர்களின் பணி நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புடைய பாடங்களில் திறன் மேம்பாட்டு நோக்கத்திற்காக குறுகிய கால மற்றும் நீண்ட கால பாடநெறிகள் நடாத்தப்பட்டதுடன், அவர்கள் வளர்ச்சி செயல்முறைக்கு எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டு, தொழிலாளர் சட்டம் மற்றும் தொழில்துறை உறவுகள் குறித்து முதலாளிகள் மற்றும் பணியாளர்கள் | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இருவருக்கும் விழிப்புணர்வை வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ii) | 3 (இ) உப பிரிவு | நிறுவனத்தினால் 2021 ஆம் ஆண்டுக்கரியதாக தொழில் கற்கைகளுக்குரிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித வள அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து செயற்பட்டு வருவதுடன், தொழிலாளர் சட்டம் மற்றும் தொழில்துறை உறவுகளுக்கான டிப்ளோமா பாடநெறி மற்றும் தொழிலாளர் சட்டம் மற்றும் தொழில்துறை உறவுகளில் உயர் தேசிய சான்றிதழ் பத்திர பாடநெறியை பின்பற்றும் மாணவர்களால் தேர்வுத் தாள்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 3(ஈ) உப பிரிவு | நூலகம் மற்றும் தகவல் சேவைகளை நிறுவுவதும் பராமரிப்பதும் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்தாலும், 2021 மார்ச் 31 வரை அத்தகைய நூலகம் மற்றும் தகவல் சேவையை நிறுவனம் செயல்படுத்தவில்லை. | 2007ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை நூலகம் ஒன்று நிறுவப்பட்டதுடன், நாரஹேன்பிட்டியில் உள்ள தொழிலாளர் பொதுச் செயலாளரின் அலுவலகம் நிறுவப்பட்டு நவீனமயமாக்கப்பட்டதன் பின்னர் 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிலிருந்து நூலகத்தை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இணையத்தளம் மூலம் அணுகக்கூடிய | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இலத்திரனியல் நூலகத்தை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (iv) | 3(உ) உப பிரிவு | ஒத்த நோக்கங்களுடனான தேசிய மற்றும் வெளிநாட்டு அமைப்புகள் சங்கங்கள் மற்றும் சங்கங்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும், ஆனால் அத்தகைய திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படவில்-லை. | இந்தியாவின் விவிகிரி தேசிய தொழிலாளர் அமைப்புடன் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நாளதுவரையாக்குவதற்காக ஆலோசிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புகளை பெற்று, அமைச்சரவையின் அனுமதியை பெற்று உடன்பாடு எட்டப்படும்.<br><br>சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்த சர்வதேச பயிற்சி நிலையத்துடன் ஒத்துழைப்பை ஏற்படுத்த ஏற்கனவே 03 சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ள்ளதுடன், தற்போது இயங்கி வரும் தொழிலாளர் சட்டங்கள் மற்றும் தொழில்துறை உறவுகளுக்கான டிப்ளோமா பாடநெறிக்கு நிறுவனத்தில் இருந்து வள பங்களிப்பைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த விவாதங்கள் முடிவடைந்துள்ளன. | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | 3(ஊ) உப பிரிவு | நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஒத்த நிறுவனங்களுடன் நிறுவனம் கலந்துரையாடல்களை | மனிதவள வேலைவாய்ப்பு முகவரகம் மற்றும் தொழில் வழங்குநர் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் ஆய்வு மற்றும் | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நடத்தியிருந்தாலும் (மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தவிர) பாடநெறிகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமா வழங்கப்படவில்லை. | அவற்றில் தற்போதுள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து அதன் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அடையாளம் காணும் நோக்கில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து ஒரு ஆராய்ச்சிக்கான ஆரம்பக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.<br><br>இலங்கை மதிப்பீட்டு சங்கத்துடன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு தொடர்பான டிப்ளோமா பாடநெறியை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் நோக்கில் முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட நிலையில், அரசுப் பணியாளர்களுக்கான தமிழ் மொழிப் புலமையைப் பெறுவதற்கான சான்றிதழ் பாடநெறியை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அரச கரும மொழிகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.<br><br>தேசிய தொழிற் தகைமைகளை (NVQ) பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தல் தொடர்பாக ஏற்கனவே மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து தேவையான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (vi) | 4 (எ) உப பிரிவு | நிறுவனத்தின் நோக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒத்த நோக்கங்களைக் கொண்டுள்ள, இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள ஏனைய நிறுவனங்களுடன் ஆட்கள் பரிமாற்றம் மற்றும் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகள் மற்றும் பொதுவாக அவர்களின் பொதுவான நோக்கங்களை முன்னோக்கி கொண்டு செல்லல் தொடர்பான பணிகளுக்காக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவை அவ்வாறு செய்யப்படவில்லை. | இந்தியாவின் விவிகிரி தேசிய தொழிலாளர் அமைப்புடன் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நாளதுவரையாக்குவதற்காக ஆலோசிக்கப்பட்டுள்ளதுடன், அதற்குரிய அமைச்சரவையின் அனுமதியை பெற்று உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | 16(1) உப பிரிவு | இந்தச் சட்டத்தின் கீழ் கடமைகளைச் செய்வதற்குத் தேவையான குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழில்நுட்பக் குழுக்களை சபை நியமித்திருக்கலாம் என்றாலும், அத்தகைய குழுக்கள் அதற்கேற்ப நியமிக்கப்படவில்லை. | நிறுவனத்தின் எதிர்கால வாய்ப்புகள் மற்றும் எதிர்கால விஸ்தரிப்பு ஆகியவற்றுடன் செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பாக சட்டத்தில் இவ்வாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் அவ்வாறான தேவை ஏற்படாத காரணத்தினால் சபை தொழில்நுட்பக் குழுக்களை நியமிக்கவில்லை. எதிர்காலத்தில் நிறுவனத்தின் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு போதிய நிதித் திறன் இருக்கும்போது | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நிர்வாகக் குழுவின் ஆலோசனையின் பேரில் சட்டத்தின் இந்தப் பிரிவுகளின்படி தொழில்நுட்பக் குழுக்கள் எதிர்காலத்தில் நியமிக்கப்படும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 13,109,428 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 7,426,319 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 20,535,747 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கொவிட் 19 தொற்றுநோய் நிலமை காரணமாக நிறுவகத்திற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடநெறிகளை நடாத்தல் இணையவழியின் ஊடாக நடாத்தப்படுகின்றமையால், 2020 ஆம் ஆண்டின் போது ஈட்டப்பட்ட ரூபா 15,932,955 ஆன வருமானங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 28,364,579 வரையிலும் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| பிரதான வருமான / செலவின உருப்படி | 2021 | 2020 | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | (%) |
| வருமானம் | 28,364,579 | 15,932,955 | 12,431,624 | 78.02 |
| அரச மானியங்கள் | 10,000,000 | 6,100,000 | 3,900,000 | 63.93 |
| நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 4,186,055 | 3,173,959 | 1,012,096 | 31.89 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 21,069,096 | 26,285,315 | (5,216,219) | (19.84) |

கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் அரச மானியம் பெறுவனவு 74 சதவீதம் மற்றும் 32 சதவீதத்தினால் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2001 ஆம் ஆண்டின் போது தொழில் | கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அதன் முதல் கோவை மற்றும் கையளிப்புக் கோவையை பெற்றுத்தருமாறு | இந்த விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |

திணைக்களத்தின் ஊழிய கற்கைகள் பிரிவிற்கு வெகுமதியளிக்கப்பட்ட வேன் வண்டியொன்று, 2008ஆம் ஆண்டின் போது ஊழிய கற்கைகள் பிரிவு தொழில் திணைக்களத்திலிருந்து பிரிந்து தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமாக தாபிக்கப்பட்ட போது அந்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனம் நிறுவகத்திற்க உரிய முறையில் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. வாகனத்தின் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனத்தின் பதிவு இலக்கத்திற்கு ஒத்த வாகனமொன்று தனிநபர் ஒருவரிடம் காணப்படுவதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன், நிறுவகத்தினால் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு 2020 சனவரி 05ஆந் திகதி முறைப்பாடு செய்யப்பட்டதன் பின்னர் அந்த பணியகத்தினால் நீதிமன்றக் கட்டளையொன்றின் ஊடாக அந்த வாகனத்திற்குரிய ஆரம்ப கோவை மற்றும் கையளிப்புக் கோவை ஆகியவற்றை பணியகத்திற்கு சமர்ப்பிக்குமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு அறிவித்து மீண்டும் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்ட போதிலும், இதுவரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. தொடர்ந்தும் அவர்களிடம் விசாரணை செய்து அந்த தகவல்களை அறிக்கையிடுகின்றேன்.

2021 திசெம்பர் 17 ஆந் திகதி நிறுவனத்திற்கு கிடைத்துள்ள மோசடி விசாரணைப் பிரிவின் 2021 திசெம்பர் 04 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் இது தொடர்பில் ஆரம்ப கோவை மற்றும் ஒப்படைப்பு கோவை பெற்றுக்கொள்ள நீதிமன்ற கட்டளைகள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விசாரணையின் செயன்முன்னேற்றம் தொடல்பில் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் என்பதை மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| | 31 ஆந் திகதி வரையிலும் இந்த கோவைகள் வழங்கப்படாத காரணத்தால் விசாரணைப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 45 ஆக காணப்படுவதுடன், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணி 14 ஆக, அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 31 சதவீதமாக காணப்பட்டது. 69 சதவீதமான பதவியணியின் பற்றாக்குறையுடனான நிறுவனம் பேணிச் செல்லப்படுவதாக காணப்படுவதுடன், சிரேஷ்ட மட்டத்திலான 09 பதவிகளில் 06 வெற்றிடங்கள் நிலவின. பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. கட்டுப்பாட்டு பிரிவின் பதவியணி விபரங்களின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 04 நிலவியதுடன், அது 2022 ஆம் ஆண்டளவில் 01 வரை குறைவடைந்திருந்தது. பரீட்சைகள் பிரிவிக் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் மற்றும் உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதன் மூலம் உரிய முறையில் கடமைகள் | கோவிட் தொற்றுநோய் காரணமாக நிறுவனத்தின் நிதி நிலைமை சவாலாக இருந்ததால், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து ஊழியர்களையும் ஆட்சேர்ப்பு செய்வது ஒரு தீங்கு விளைவிக்கும் செலவாகும், எனவே சரியான மதிப்பீட்டின்படி அத்தியாவசிய பதவி வெற்றிடங்களை மட்டுமே நிரப்புவதற்கு ஆட்சேர்ப்பு மதிப்பீடு செய்யப்பட்டது. அனைத்து பணியிடங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்தால், தேவையற்ற செலவுகளை அரசே ஏற்க வேண்டியிருக்கும் என்பது உறுதி செய்யப்பட்டது.<br><br>நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம், ஆராய்ச்சி) 02 பதவிகளும், 01 நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் பதவியும், 01 நிதி உத்தியோகத்தர் பதவியும் 01 முகாமைத்துவ உதவியாளர் பதவி ஆகியவற்றுக்குரிய ஆட்சேர்ப்புகளுக்காக தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டு , ஆட்சேர்ப்புக்குரிய எஞ்சிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.<br>ஆனால் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் படி ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. | நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையாக பதவியணியை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | நல்ல தொழிலாளர் உறவுகளைப் பேணுவதன் மூலம் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு பங்களிக்கும் திறமையான தொழிலாளர் படையை உருவாக்குவதற்காக, நிறுவனம் 03 முக்கிய பாடங்கள் மூலம் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளை நடத்துகிறது. ஆனால் கடந்த 05 ஆண்டுகளில் நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் பகுப்பாய்வில், பெரும்பாலும் ஒரே மாதிரியான பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டது மற்றும் கணக்காய்வின் போது போது புதுமை அல்லது பல்வகைப்படுத்தல் காணப்படவில்லை. அதாவது, புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல், தேர்வர்களின் தேவைக்கேற்ப பாடத்திட்டங்களை திருத்துதல், புதிய முறையில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்றவற்றில் பயிற்சித் துறையின் கவனம் செலுத்தப்படவில்லை. | எமது நிறுவனத்தினால் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் புதுமை மற்றும் பன்முகத்தன்மையுடன் கூடிய பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.<br><br>பயிற்சி பெறுபவர்கள் அதிக தொழில்முறை நிலை மற்றும் அவர்களின் சேவை தேவைகள் மற்றும் அவர்களின் எதிர்கால தொழில் வாய்ப்புகளுக்கு ஏற்ப பாடநெறிகள் நடத்தப்படுகிறதா இல்லையா என்பது மற்றும் அதற்கு, அந்த நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி வகுப்புகள், அனுபவம் வாய்ந்த, நல்ல பயிற்சி மற்றும் பாடநெறிகள் பற்றிய அறிவைக் கொண்ட வளவாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களால் நடத்தப்படுகிறதா. அத்தகைய முயற்சிகள் கிடைக்கவில்லை என்றால், அவர்கள் எங்கள் நிறுவனம் நடத்தும் படிப்புகள் மற்றும் நிகழ்ச்சிகள் மற்றும் பட்டறைகளில் பங்கேற்க மாட்டார்கள்.<br><br>எங்கள் நிறுவனம் மேற்கூறிய நடைமுறைகளைக் நோக்கி கடினமாக உழைத்துக்கொண்டிருக்கும் அதே வேளையில், தற்போதுள்ள சவால்களுக்கு மத்தியில், பாடநெறிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களில் புதுமைகளை உருவாக்க எங்கள் நிறுவனங்கள் ஏற்கனவே 8 வெவ்வேறு நடைமுறைகளை எடுத்துள்ளது. | நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள ஆக்கபூர்வமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியமை. |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரச துறையின் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் தேவைப்பாடுகளுக்கமைய பதவியணியை ஆட்சேர்ப்பு செய்தல், வினைத்திறன் காண் தடைப்பரீட்சைமற்றும் மதிப்பாய்வுகள் மற்றும் சேவைத் தரமேற்றல் ஆகியவற்றுக்கான பரீட்சைகள் பரீட்சைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படும். எனினும், வினாத்தாள்களை தயாரித்தல், வினாத்தாள்களை மதிப்பிடு செய்தல் சபையினால் அல்லாது தனிநபரால் மேற்கொள்ளப்படுவதுடன், மற்றுமொரு நபரால் மேற்பார்வை மேற்கொள்ளப்படாததுடன், இதன் காரணமாக பரீட்சை மோசடிக் ஏற்படுவதற்கான அச்சுறுத்தலொன்று நிலவுவதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டினுள் தொழில் அமைச்சுடன் தொடர்புரடைய இரு நிறுவனங்களின் 6 பரீட்சைகள் தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம் நடாத்தியிருந்ததுடடன், பரீட்சை நடாத்தும் சுயாதீனத்துவம் தொடர்பில் பிரச்சினைகள் உருவாகக்கூடும். | பரீட்சைகள் பிரிவிற்குரிய வளப் பங்களிப்பாளர்களை தெரிவு செய்தல், கொடுப்பனவுகளை முறையாக மேற்கொள்வதற்காக நடைமுறையொன்றினை அறிமுகப்படுத்தி 2012 பெப்ரவரி 02 ஆந் திகதி இடம்பெற்ற கட்டுப்பாட்டு சபையின் கூட்டத்தில் 02 பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனூடாக பரீட்சைகள் பிரிவின் பணிகளை முறைமைப்படுத்தி தரமான சேவையினை வழங்குதல் நோக்காக கொள்ளப்பட்டுள்ளது.<br><br>பரீட்சை மோசடிக் ஏற்படுவதை தடுத்தல், இரகசியத்தன்மையை பேணுதல் ஆகியவற்றுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும எடுப்பதன் தேவைப்பாடு எமது நிறுவனத்தினால் இனங்காணப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை ஆகும். இது தொடர்பில் கட்டுப்பாட்டுச் சபையின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுட்ன, அங்கு எடுக்கப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். எவ்வாறான போதிலும், பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி) பதவிக்காக பொருத்தமான ஒருவரை இதுவரை ஆட்சேர்க்க இயலாமையால், | அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறையொன்றினை பின்பற்றி பரீட்சை விதிகளின் பிரகாரம் உரிய முறையில் பரீட்சைகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | இதுவரை நடாத்தப்பட்ட பரீட்சைகள் தொடர்பான பணிகள் பணிப்பாளர் நாயகத்தின் நேரடியான மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.<br><br>தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம் தொழில் அமைச்சின் கீழ் உள்ள போதிலும், அது சுயாதீனமான நிறுவனம் ஆகும். அதன் பிரகாரம் தொழில் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் பரீட்சைகள் நடாத்துதல் எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இந்த நிறுவனங்களின் இரகசியத்தன்மையை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுளுள்ளதுடன், பரீட்சைகளை நடாத்தும் உச்ச நம்பிக்கை மற்றும் இரகசியத்தன்மை பாதுகாப்பப்படும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றமையால் இதுவரை நடாத்தப்பட்ட பரீட்சைகளில் பிரச்சினையொன்று உருவாகவில்லை என்பதுடன் தொழில்சார் முறையில் நடாத்தப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (ஆ) | 2020 யூலை மாதத்தில் ஆராய்ச்சி, வெளியீடுகள் மற்றும் செயற்திட்ட பிரிவொன்றை தாபிதது அந்த பிரிவிற்காக பதிற்கடமை உதவி பணிப்பாளர் ஒருவர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தார். 2022 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் ஏனைய பதவியணியை ஆட்சேர்ப்பு | தற்போது, அந்த நிறுவனத்திற்கு உள்ள வரையறுக்கப்பட்ட மனித மற்றும் நிதி வளங்களை கருத்திற் கொண்டு, தற்போதுள்ள மனித வளத்தை அதிகபட்சமாக பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, நிறுவனம் நிதி ரீதியாக ஸ்திரமாக இருப்பதற்கும் | நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்ற அங்கீகரிக்கப்பட்ட பதவியணி நியமிக்கப்பட வேண்டும். |

செய்யவோ, அல்லது இணைப்புச் செய்யப்படவோ இல்லை. அதன் பிரகாரம், அந்த பிரிவினை தாபிக்கும் ஏதிர்பார்த்த நோக்கத்தினை நிறைவேற்றல் மிகவும் மந்தமான முறையில் நிலவியது.

மனித வளங்களை அதிகரிப்பதற்கும் இடையே சமநிலையை பராமரிக்கிறது. மேலும், ஆராய்ச்சி, வெளியீடு மற்றும் செயற்திட்டத் துறைகளுக்குத் தேவையான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 47 வது கட்டுப்பாட்டுச் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட 362 நிர்வாகப் பத்திரம் மூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்காலத்தில் தொற்றுநோய் நிலைமை வழமைக்குத் திரும்பியதும், நிறுவனத்தின் நிதி நிலைமை சீராகும் போது தகுதியான அதிகாரிகளை அந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.